**தலைப்பு – 160 – சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்பிற்குமான கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

## 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்

| தலைப்பு | திணைக்களப் பெயர் |
|---|---|
| 283 | வன பாதுகாப்புத் திணைக்களம் |

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மேற்கூறப்பட்ட 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சினதும் வன பாதுகாப்புத் திணைக்களத்தினதும் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை கீழே குறிப்பிடப்படும் திகதிகளில் அமைச்சின் செயலாளரிற்கும் திணைக்களத்தின் தலைவருக்கும் வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| தலைப்பு | அமைச்சு/ திணைக்களம் | முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 160 | சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சு | 2015.07.16 |
| 283 | வன பாதுகாப்புத் திணைக்களம் | 2015.07.03 |

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 4,304.27 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 3,497.29 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் முறையே ரூபா 785.27 மில்லியன் மற்றும் ரூபா 21.7 மில்லியன் அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 29.63 சதவீதம் மற்றும் 1.3 சதவீதம் ஆகக் காணப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 160 | 2,649.95 | 1,864.69 | 785.27 | 29.63 |
| 283 | 1,654.32 | 1,632.60 | 21.7 | 1.31 |
| மொத்தம் | **4,304.27** | **3,497.29** | **806.97** | 18.75 |

### 2.2 வருமானக் கணக்குகள்

**மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டிற்கான இரண்டு வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 2,060 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 789 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. மதிப்பிடப்பட்ட

வருமானத்தில் 37 சதவீதத்திற்கும் 83 சதவீதத்திற்குமிடையேயான சதவீத வீச்சில் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானக் குறியீடு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மதிப்பீட்டின் சதவீதமாக பற்றாக்குறை |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | பற்றாக்குறை | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 10:03:07:03 | 60 | 50 | 10 | 16.67 |
| 20:02:01:02 | 2,000 | 739 | 1,261 | 63.05 |
| மொத்தம் | 2,060 | 789 | 1,271 | 61.70 |

**2.3 முற்பணக் கணக்கு**

**2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்கான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 16001 | 7.5 | 6.28 | 4.5 | 5.68 | 40.00 | 24.24 |
| 28301 | 60 | 41.45 | 48 | 62.20 | 301.00 | 217.00 |

## 2.4 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10.48 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| அமைச்சு/ திணைக்களம் | கட்டுநிதிக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| | | ரூபா. மில்லியன் |
| சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சு | 7002/0000/00/0323/0014/000 | 0.52 |
| வன பாதுகாப்புத் திணைக்களம் | 7002/0000/00/0045/0014/000 | 9.96 |
| மொத்தம் | | 10.48 |

## 2.5 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 24.77 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா. மில்லியன் |
| சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சு | 6000/0000/00/0015/0070/000 | 6.16 |
| வன பாதுகாப்புத் திணைக்களம் | 6000/0000/00/0015/0138/000 | 18.61 |
| மொத்தம் | | 24.77 |

## 2.6 கணக்காய்வு அவதானிப்பு

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சினதும் வன பாதுகாப்புத் திணைக்களத்தினதும் ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தி முதல் 4 ஆம் பந்தி வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 160 – சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சு

### 3.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 65,724,000 மொத்தத் தேறிய நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 57 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் 10 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்குமிடையேயான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.2 பொது வைப்புக் கணக்கு

2 வருடங்களை விஞ்சிய (காணி வைப்புத் தவிர) ரூபா 5,278,058 கூட்டுத்தொகையான 04 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

விடய இலக்கம் 16001 இற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 329,983 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு அமைச்சு தவறியிருந்தது.

**3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

அலுவலக உபகரணங்கள் மற்றும் ஏனைய 71 விடயங்கள் விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2014 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளிலிருந்து சுட்டிக்காண்பிக்கப்பட்ட மிகை, பற்றாக்குறை மற்றும் வழங்கப்பட்ட ஏனைய சிபாரிசுகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 வெளிநாட்டு உதவி செயற்திட்டம்

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டு நிதியீட்டத்தின் கீழ் 17 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தன. கடன் உடன்படிக்கைகள், செயற்திட்ட உடன்படிக்கைகள் என்பவற்றின் பிரகாரம் அதன் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயங்களின் கூட்டுமொத்தம் ரூபா 790,571,046 ஆக இருந்ததுடன் அந்த செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 295,728,256 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த வெளிநாட்டுதவி செயற்திட்டங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு நேரொத்த வகையில் செயலாற்றல் முன்னேற்ற மீளாய்வு அறிக்கையொன்று தயாரித்து கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் வெளிநாட்டுதவி செயற்திட்டங்களின் செயலாற்றல் மதிப்பீட்டை உரிய பிரகாரம் மேற்கொள்ளமுடியாதிருந்தது.

(ஆ) தேசிய ஓசோன் பிரிவு தொடர்பாக வெளிநாட்டுதவி செயற்திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு அறிக்கை மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயற்பாடுகள் என்பவற்றைப் பரீட்சிக்கும் போது பணம் சேமிக்கப்பட்ட இரண்டு சந்தர்ப்பங்களும், விஞ்சிய ஒரு சந்தர்ப்பமும் காணப்பட்டன.

(இ) அமைச்சின் பதவியணியினர் சுற்றாடலில் இரசாயன முகாமைத்துவ இயலளவை அதிகரிக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 150,000 தொகையான நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமையினால் அந் நிகழ்ச்சித்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

### 3.7 செயலாற்றல்

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

அமைச்சினால் பிரதான பணிகள் நிறைவேற்றப்படாத மற்றும் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்த அல்லது அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) 45 அட்டவிசி போதிபூஜா நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா 4 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 65,350 தொகை பயன்படுத்தப்பட்டு 09 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தன.

(ii) செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 81.97 சதவீதம் முதல் 88.25 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

**(ஆ) திட்டமிடல்**

----------------------

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிகாரம் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய ரூபா 186,225,000 தொகையான 14 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத இரண்டு செயற்பாடுகளுக்காக ரூபா 1,675,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(iii) மேற்குறித்த திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது காலந்தாழ்த்தப்பட்ட 2 செயற்பாடுகள் காணப்பட்டன.

**3.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

---------------------------------------------------------------------------------------------

தூய்மையாக்கலை அபிவிருத்தி செய்யும் பொறிமுறை தொடர்பாக செயலகமொன்றை உருவாக்குவதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,500,000 தொகையான நிதி ஏற்பாடுகளில் ரூபா 378,000 தொகை பயன்படுத்தப்பட்டு உணவு பாதுகாக்கப்படுதல் தொடர்பில் நாட்டின் காலநிலை மாற்றங்களின் தாக்கம் மற்றும் நேரொத்தவைகள் தொடர்பாக சர்வதேச மாநாடு நடாத்தப்பட்டிருந்தது.

**3.9 நட்டமும் இழப்பும்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டம் மற்றும் இழப்பு தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 588,278 தொகையான இரண்டு இழப்பும் மற்றும் நட்டங்கள் காணப்பட்டன.

(ஆ) மேலே (அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட நட்டம் மற்றும் சேதங்களுக்கு மேலதிகமாக ரூபா 25,000 தொகையை விஞ்சிய 2009 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற 06 சம்பவங்களுக்குரிய ரூபா 882,675 கூட்டுமொத்தமான நட்டமும் இழப்பும் காணப்பட்டிருந்தன.

**3.10 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பாரம்பரிய அறிவு தொடர்பான தேசிய கொள்கைகளுக்காக தந்திரோபாயங்களை அங்கீகரித்துக் கொள்வதற்கு குறிப்பிட்ட திட்டம் அல்லது மதிப்பீடு தயாரிக்கப்படாமல் ரூபா 179,200 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் சரியான தேசிய கொள்கையொன்றை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.11 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 55 | 24 | 31 |
| (ii) | மூன்றாம் நிலை | 38 | 34 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 183 | 119 | 64 |
| (iv) | ஆரம்ப நிலை | 76 | 47 | 29 |
| (v) | ஏனையவை (அமையம்/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 01 | 01 | - |
| | மொத்தம் | 353 | 225 | 128 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டின் இறுதியளவில் 128 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4. தலைப்பு 283 – வன பாதுகாப்புத் திணைக்களம்**

**4.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

திணைக்களத்தால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடு | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) | கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (iii) | எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய் இருப்புப் புத்தகம் | நிதிப்பிரமாணம் 1647(ஈ) |
| (iv) | காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பான பட்டியல் | நிதிப்பிரமாணம் 571(1) |

**4.2 கணக்காய்விற்கான சான்றின்மை**

நிதிப்பிரமாணம் 272(3) ஆம் பிரிவின் பிரகாரம் வலய அலுவலகங்கள், மாவட்ட வன அலுவலகங்கள், கும்பல்பொல ஆராய்ச்சி நிலையம் மற்றும் வன விஞ்ஞான நிறுவனம் என்பவற்றின் 2014 ஆம் ஆண்டிற்குரிய கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

07 செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின

விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 78 சதவீதம் முதல் 11 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**4.4 வருமானக் கணக்குகள்**

---

**4.4.1 20:02:01:02 ஆம் வருமானக் குறியீடு – அரச காடுகளிலிருந்து பெறப்படுகின்ற வருமானம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வருமானக் குறியீட்டிற்குரிய ரூபா 2,000 மில்லியன் வருமானமொன்றை சேகரிப்பதற்கு மதிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 739 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 37 சதவீதமாகும். அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திலிருந்து கிடைக்கவேண்டிய ரூபா 1,056.38 மில்லியன் உரிமை வருமானத் தொகை கிடைக்கப் பெறாமை மீளாய்வாண்டின் வருமானம் குறைவடைவதற்கு காரணமாக இருந்தது.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம், ரூபா 1,060 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் நிலுவையாகக் காணப்பட்டதுடன், அந்நிலுவை வருமானம் 01 ஆண்டு முதல் 04 ஆண்டுகள் வரையிலான கால வீச்சுக்குரியதாகும். நிலுவை வருமானத்தை அறவிடும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(இ) வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிதிப்பிரமாணம் 176(1) இன் பிரகாரம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வருமானக் குறியீட்டிற்குரிய நிலுவை வருமானம் தொடர்பான வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவ்வறிக்கையில் தலைமை அலுவலகத்திற்குரிய ரூபா 458.31 மில்லியன் நிலுவை வருமானம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிலுவை வருமான அறிக்கை தயாரிக்கும் போது தலைமை அலுவலகம், கும்பல்பொல ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் வன விஞ்ஞான நிறுவனம் என்பவற்றை உள்ளடக்கிய 31 நிறுவனங்களில் 19 நிறுவனங்களிலிருந்து மாத்திரம் பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நிலுவை வருமான அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது.

(உ) 2014 இன் நிலுவை வருமானத்தில் உள்ளடக்கப்படாதிருந்த ரூபா 187,831 தொகை 2015 சனவரி மாதத்தின் போது கிடைத்திருந்தது.

(ஊ) அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திலிருந்து வன பாதுகாப்புத் திணைக்களத்திற்குக் கிடைக்க வேண்டிய உரிமைப் பணம் மற்றும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திலிருந்து திணைக்களத்திற்குச் செலுத்தவேண்டிய உரிமைப் பணம் என்பவற்றிற்கிடையே ரூபா 92,091,958 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

**4.4.2 10:03:07:03 ஆம் வருமானக் குறியீடு – தனியார் மரப் போக்குவரத்து வருமானக் கணக்கு**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் மேற்கூறப்பட்ட வருமானக் கணக்கிற்குரிய ரூபா 60 மில்லியன் வருமானமொன்றை சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 83 சதவீதம் அதாவது ரூபா 50 மில்லியன் அளவான வருமானமொன்று சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் ரூபா 534,758 கூட்டுத்தொகையான வருமானம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் அந்த நிலுவை வருமானம் 01 ஆண்டு முதல் 04 ஆண்டுகள் வரையிலான கால வீச்சிற்குரியதாகும். நிலுவை வருமானத்தை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(இ) நிதிப்பிரமாணம் 128(2) இன் பிரகாரம் நிலுவை வருமான அறிக்கை தயாரிக்கும் போது தலைமை அலுவலகம், வலய அலுவலகங்கள், மாவட்ட வன அலுவலகங்கள், கும்பல்பொல ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் வன விஞ்ஞான நிறுவனம் ஆகிய 31 நிறுவனங்களில் 20 நிறுவனங்களின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு நிலுவை வருமான அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2015 ஆம் ஆண்டின் சனவரி மாதத்தின் பெறுவனவுப் பற்றுச்சீட்டுக்களைப் பரீட்சித்த போது நிலுவை வருமானத்தில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 168,536 தொகையான வருமானம் 2015 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்தது.

**4.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம், அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுதொகை ரூபா 8,778,940 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 4,947,593 நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையிலான காலவீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

**4.6 பொது வைப்புக் கணக்கு**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 வருடங்களை விஞ்சிய தலைமை அலுவலகத்திற்குரிய ரூபா 1,562,363 தொகையான 60 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தலைமை அலுவலகத்தில் நானாவித வைப்புக் கணக்கின் மீதி திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் ரூபா 12,538,867 ஆக இருந்த போதிலும், நானாவித வைப்புப் பதிவேட்டின் பிரகாரம் அம்மீதி ரூபா 11,701,980 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 836,887 தொகை வித்தியாசமாக இருந்தது.

**4.7 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும். மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அது 2015 மார்ச் 30 ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

--------------------------------------------------------

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அது 2015 ஏப்ரல் 04 ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருந்தது.

**4.8 சொத்துக்கள் முகாமைத்துவம்**

--------------------------------------------------

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

-----------------------------------------------------------

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அவ்வறிக்கை 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தால் அவ்வறிக்கை 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 ஆம் ஆண்டிற்காகவே நடாத்தப்பட்டிருந்தது.

**(ஆ) ஏனைய நிறுவனங்களுக்குரிய சொத்துக்களை பயன்படுத்துதல்**

----------------------------------------------------------------------------------------------

அமைச்சுக்கள் மற்றும் 10 பல்வேறு செயற்திட்டங்களுக்குச் சொந்தமான 49 வாகனங்கள் முறையான அங்கீகாரமின்றி வன பாதுகாப்புத் திணைக்களத்தால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(இ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

-----------------------------------------------------------------------------------------------------------

மத்துகம அடவி வன அலுவலகத்தின் உத்தியோகபூர்வ விடுதிக் கட்டிடத்தில் இரண்டு ஹொண்டா மோட்டார் சைக்கிள்கள், சுசுகி வகையினதும் Kinetee வகையினதும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் உடைந்த நிலையில் தரித்து வைக்கப்பட்டிருந்தது. இந்த மோட்டார் சைக்கிள்களை பழுதுபார்த்து

பாவனைக்கு எடுப்பதற்கோ அல்லது பாவனைக்கு எடுக்க முடியாதாயின் விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.9 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
| --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 104 | 09 சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட நட்ட இழப்புத் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 1647 | திணைக்களத்தில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட 343 குழாம் வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் என்பன 2015 மார்ச் 30 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**4.10 வெளிநாட்டுதவி செயற்திட்டம்**

மீளாய்வாண்டின் போது திணைக்களத்தால் வெளிநாட்டு நிதி வழங்கலின் கீழ் செயற்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அதன் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 771 மில்லியனாக இருந்ததுடன் அந்த செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 187.72 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் வேதனங்களுக்கான ரூபா 389,621 தொகை திரண்ட செலவின அறிக்கையில் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்திற்காக ரூபா 29,756,748 தொகை செலவில் 03 வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அப்பெறுமதி ரூபா 9,918,916 தொகையால் அதிகரித்து திரண்ட செலவின அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது திணைக்களத்தின் கள உத்தியோகத்தர்களின் அறிவை முன்னேற்றுவதற்கான 32 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு ரூபா 1,555,180 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 1,529,878 தொகை செலவில் 21 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக பங்குபற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட மற்றும் உள்ளபடியாக பங்குபற்றியவர்களின் விபாரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) செயற்திட்டக் காலப்பகுதியின் 60 சதவீத முடிவில் செயற்திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதியில் 39 சதவீதம் அதாவது ரூபா 304 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(உ) செயற்திட்டத்திற்காக ரூபா 6,783,873 தொகையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்திற்காக நிலையான சொத்துப்பதிவேடொன்று பேணப்படாதிருந்ததுடன் வருடாந்த சொத்து மெய்மையாய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.11 வங்கிக் கணக்கு செயற்பாடுகளின் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) வங்கிக் கணக்கிணகக்கூற்று தயாரித்தலில் நீண்ட தாமதம்

முல்லைத்தீவு மாவட்ட வன அலுவலகத்தின் வங்கி நடைமுறைக் கணக்கிற்கான 2014 ஒக்தோபர் முதல் 2015 மார்ச் வரையான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 10 ஆந் திகதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சீராக்கப்பட வேண்டிய மீதிகள்**

05 வங்கி நடைமுறைக் கணக்குகளின் மூலம் வழங்கப்பட்ட காலாவதியான ரூபா 23,786 கூட்டுப்பெறுமதியான 09 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.12 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**அரசாங்க கொள்வனவு வழிகாட்டி செயல் நடைமுறைகளைப் பின்பற்றாமை**

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு**

வன தொகைமதிப்பு மற்றும் பூகோள விஞ்ஞான தகவல் பிரிவிற்காக அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் நடைமுறைகளுக்குப் புறம்பாக 04 மாத காலத்தில் ரூபா 102,474 பெறுமதியான தளபாட உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிந்தன.

**(ஆ) களுத்துறை மாவட்ட வன அலுவலகத்தால் எல்லைத் தூண்களின் கொள்வனவு**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வன பாதுகாப்பாளரின் (வன விஞ்ஞானம் மற்றும் முகாமை) 2014 யூன் 23 ஆந் திகதிய FM/மா/2014/நி.க ஆம் இலக்க கடிதத்தின் மூலம் மாவட்ட வன உத்தியோகத்தர் களுத்துறைக்கு 1100 எல்லைத் தூண்களைப் பெற்றுக்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அந்த ஆலோசனைகளுக்கு முரணாக தலைமை அலுவலகத்தின் அங்கீகாரமின்றி எல்லை தூண் உற்பத்தி செய்யாத இரண்டு நிறுவனங்களிலிருந்து கேள்வி கோரப்பட்டிருந்தது. 2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அந்த நிறுவனங்களுக்குரிய தொழிலாளர்கள் மற்றும் கொங்கிரீட் தூண் உற்பத்திக்கு பொருத்தமான இடமொன்றோ காணப்படவில்லை.

(ii) களுத்துறை மாவட்டத்தின் அகலவத்தை அடவியின் காடு வரை எல்லைத்துாண்களைப் போக்குவரத்துச் செய்வதற்காக கேள்விகோரும் போது உரிய பிரகாரம் போட்டியுடனும் வெளிப்படையானதாகவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) மேலும் கேள்வி கோரல் கடிதத்தில் கூறுவிலைகள் சமர்ப்பிக்கும் போது பெறுமதி இலக்கத்தால் மாத்திரம் குறிப்பிடப்பட்டமையால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளில் குறிப்பிடப்பட்ட கூறுவிலைகளில் மாற்றங்களைச் செய்யும் இயலுமை காணப்பட்டமையும், கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பங்களில் கேள்விதாரர்கள் அதிகமானோர் சமூகமளிக்காதிருந்தமையும் வெளிப்படுத்தப்பட்டது.

(iv) மேலும் உலக சுற்றாடல் தின விழா நிகழ்ச்சித்திட்டத்திற்காக தேவையான கட்டிடப்பொருட்களை வழங்குவதற்காக கேள்வி கோரும் போது அனேகமான நிறுவனங்களுக்கு கூறுவிலை கோரல் கடிதம் எடுத்துச் செல்லப்பட்டு அந்த நிறுவனங்களுக்குரிய இறப்பர் முத்திரை இட்டு கையொப்பம் பெறப்பட்டு விலைத்தொகை வெற்றிடமாகக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் அவற்றைப் பூர்த்தி செய்து கூறுவிலைக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

**4.13 நட்டமும் இழப்பும்**

நட்டம் ரூபா 25,000 இற்கு குறைவான 33 சம்பவங்களும், நட்டம் ரூபா 25,000 இற்கு மேற்பட்ட 62 சந்தர்ப்பங்களும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. அதில் 68 சம்பவங்களில் நட்டம் ஏற்பட்டு 10 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்தது,

**4.14 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது சிக்கனமற்றதாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) மொரப்பிட்டிய பீட்டு வன உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ விடுதி பழுதுபார்த்தல்**

---

மொரப்பிட்டிய பீட்டு வன உத்தியோகத்தர் உத்தியோகபூர்வ விடுதியின் பழுதுபார்த்தலுக்காக ரூபா 599,616 தொகையில் மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு அதற்காக ரூபா 600,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தரைக்கு கொங்கிரீட் இடுவதற்காக 200 சதுர அடிக்காக மதிப்பீட்டில் ரூபா 33,710 தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் உள்ளபடியாக 62 சதுர அடி மாத்திரம் கொங்கிரீட் இடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மிகை மதிப்பீடு ரூபா 23,260 ஆகும்.

(ii) 35 கூரைத் தகரங்களுக்காக ரூபா 21,700 தொகையான மிகை மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

(iii) கதவு நிலைகளுக்காக 40 சதுர அடிகளுக்கு ரூபா 20,800 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் பௌதீக பரிசோதனையின் போது அவ்வாறான கதவு நிலையொன்று பொருத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மிகை மதிப்பீடு ரூபா 20,800 ஆக இருந்தது.

(iv) கதவுகைளச் செய்வதற்கு 120 சதுர அடிக்காக ரூபா 87,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. பௌதீக பரிசோதனையின் போது பொருத்தப்பட்ட கதவின் அளவு 94 சதுர அடி ஆனமையால் மிகை மதிப்பீடு ரூபா 8,000 ஆகும்.

(v) இந்த பழுதுபார்த்தலுக்காக 63 பயிற்சி பெற்ற தொழிலாளர்களும், பயிற்சி பெறாத 86 தொழிலாளர்களும், 63 அமைய தொழிலாளர்களும் ஈடுபடுத்தப்பட்டதாக மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

**(ஆ) கருங்கல் அகற்றுதல் - வெல்லவாய அடவி வன அலுவலகம்**

---

வெல்லவாய அடவி வன அலுவலகத்தின் கீழ் அமைந்துள்ள ஒதுக்கப் பிரதேசங்களில் கருங்கல் உடைத்து அகற்றுவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது 18 நபர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன்,

தெரிவுசெய்யப்பட்ட 4 இடங்களை பரிசோதனைக்கு உட்படுத்திய போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) வெல்லவாய அடவி வன அலுவலகத்திற்குரிய கோன் பெலேன ஒதுக்கப் பிரதேசங்களில் அமைந்துள்ள கருங்கல்லிருந்து கற்கைள உடைப்பதற்கும் அதன் அருகில் அமைந்துள்ள கருங்கல் உடைக்கும் நிலையத்தை நடாத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதில் மூவரினால் கல் உடைக்கும் ஆலைகளும் அதன் அருகே செயற்படுத்தப்பட்டிருந்தது.

(ii) வன ஒதுக்கப் பிரதேசத்தில் உள்ள கருங்கற்களை உடைப்பதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் போதும், கருங்கற்களை உடைக்கும் போதும், அடவி வன அலுவலகம் மேற்பார்வை நடவடிக்கைகளைச் செய்திருக்கவில்லை. இதனால் அனுமதிப்பத்திரம் பெற்ற நபர்களினால் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய பணத்தை செலுத்தாது வனப் பொருட்கள் அகற்றப்பட்டமையால் அரசாங்கத்திற்கு ரூபா 3,588,600 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(iii) வெல்லவாய அடவி வன அலுவலகத்திற்குரிய கொட்டிகம் பொக்க ஒதுக்கப்பகுதியில் அமைந்துள்ள சிலிக்கா படிமங்களை (சிலிக்கா கற்களை) அகற்றுவதற்காக 2014 ஆம் ஆண்டிற்காக 9 நபர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இந்த சிலிக்கா கல் பகுதி காடுகள் வளர்ந்துள்ள மரங்களுடன் மலையொன்றில் அமைந்திருந்தது. உடைத்து எடுக்கப்பட்ட சிலிக்காவைப் பரீட்சித்த போது இயற்கையான சூழலுக்கு அதிகூடிய பாதிப்பை ஏற்படுத்துகின்றமை வெளிப்படுத்தப்பட்டது. 2014 ஆம் ஆண்டின் போது இந்த சிலிக்காக் கற்களை அகற்றுவதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது அரசாங்கத்திற்கு ரூபா 188,100 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 4.15 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் பின்தொடர் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத பந்திகளுக்குரிய தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2008 | 4.3 (ஆ) | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கில் நிலுவைக் கடன் மீதிகளை அறவிடும் பின்தொடர் நடவடிக்கைகளில் பலவீனம் |
| 2009 | 4.3 (ii) | |
| 2010 | 1.3 (ஈ)(i) | |
| 2011 | 1.3 (ஊ) | |
| 2012 | 1.3 (உ) | |
| 2012 | 1.3 (உ) | |
| 2010 | 1.21 (ஊ) | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை |
| 2011 | 1.11 (க) | |
| 2013 | 1.6 (அ)(iii) | கணனி உபகரணம் மற்றும் மென்பொருள் தொடர்பான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 4.16 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) மத்துகம அடவி வன அலுவலகத்தைப் பழுதுபார்த்தல்

மத்துகம அடவி வன அலுவலகத்திற்குரிய உத்தியோகபூர்வ இல்லத்தைப் பழுதுபார்ப்பதற்காக ரூபா 207,948 தொகையில் மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த பழுதுபார்த்தலுக்காக ரூபா 179,003 தொகை செலவிடப்பட்டிருந்தது. கூரையில் ஒரு பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த அத்தியவசிய திருத்தமொன்று கவனயீனமாக விடுபட்டிருந்தது.

**(ஆ) மரத் தொழில் முயற்சிகளின் பதிவினைப் புதுப்பித்தல்**

---

வக, அகலவத்த, மத்துகம மற்றும் இங்கிரிய அடவி வன அலுவலகங்களின் கீழ் 2014 ஆம் ஆண்டிற்காக பதிவு செய்யப்பட வேண்டியிருந்த 84 மர தொழில்முயற்சிகளின் பதிவு புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்காமையினால் அரசாங்கத்திற்கு ரூபா 114,810 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

**(இ) ஹபரணை, திருகோணமலை வீதியின் இருபக்கமும் வன பயிர்ச்செய்கை செயற்திட்டமொன்றை திட்டமிடுதல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கையின் வன மேவுகையை அதிகரிப்பது தொடர்பில் விஷேட கவனம் செலுத்தி தனியார் துறையின் பங்களிப்பைப் பெற்று வன பாதுகாப்புத் திணைக்களத்துடன் தனியார் கம்பனியொன்றும் இணைந்து மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக போதியளவான முயற்சி எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அக்கம்பனியுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் 50,000 கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு ஏனைய செலவின விடயத்தின் கீழ் ரூபா 429,689 செலவிடப்பட்டிருந்தது.

(ii) செயற்திட்டத்திற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டு செயற்திட்டத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், வன பாதுகாப்பாளரின் (வன விஞ்ஞான மற்றும் முகாமைத்துவம்) வாய்மொழி மூல ஆலோசனையின் பேரில் வனாந்தரங்களை மீளமைப்பதற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட செலவின விடயங்களிலிருந்து உரிய செலவினம் செய்யப்பட்டிருந்தது. இதனால் அந்த செலவின விடயத்தின் கீழ் அமுல்படுத்த வேண்டியிருந்த வனாந்தர மீளமைப்பு பணிகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

**(ஈ) பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது அழிவடையும் நிலையில் காணப்படுகின்ற பழைய வாகனங்களை அகற்றுதல்**

---

2013 யூன் 05 ஆந் திகதிய PCMD/PR/2013 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு திணைக்களத்தில்

காணப்பட்ட பழுதடைந்த நிலையிலுள்ள 26 வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அந்த வாகனங்களில் மதிப்பீட்டுக் குழுவினால் அதில் 14 வாகனங்களை மாத்திரம் அகற்றுவதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. திணைக்களத்தால் அதற்கு மேலதிகமாக வேறு 08 வாகனங்களையும் உள்ளடக்கி 22 வாகனங்களை அகற்றுவதற்காக பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பதிவினை இரத்துச் செய்து விற்பனை செய்வதற்காக குழு சிபாரிசு செய்த ஐந்து வாகனங்களின் பதிவுச் சான்றிதழ்களில் காணப்பட்ட குறைபாடுகளைத் திருத்துவதற்காக சிபாரிசு செய்யப்பட்ட மூன்று வாகனங்களும், வாகன விற்பனை அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டமையால் ஒரு வாகனத்திற்காக ரூபா 500 வீதம் 114 வாடிக்கையாளர்களினால் செலுத்தப்பட்ட மீளச் செலுத்தாத ரூபா 57,000 தொகையான வைப்பு அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ii) அதற்கு மேலதிகமாக அந்த 114 வாடிக்கையாளர்களினால் வாகனமொன்றிற்காக ரூபா 5,000 வீதம் செலுத்தப்பட்ட ரூபா 570,000 கூட்டுத்தொகையான பிணை வைப்புக்களில் ரூபா 70,000 தொகை 07 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக மீளச் செலுத்தப்படாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(iii) சில வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக கேள்விதாரர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகளிற்கு வாகனங்களை விற்பனை செய்தல் திணைக்களத்தால் நிராகரிக்கப்பட்டிருந்த போதிலும், அவர்களினால் வைப்புச்செய்யப்பட்டிருந்த ரூபா 40,000 பிணை வைப்பு 2014 நவம்பர் 13 ஆந் திகதி வரையிலும் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) இரண்டு வாகனங்களுக்குரிய கொள்வனவாளர்களினால் பணம் செலுத்தி எடுத்துச் செல்லப்பட்டிருந்த போதிலும், அந்த வாகனங்களின் சட்டரீதியான உரித்தை கையளிப்பதற்கு 2014 நவம்பர் 13 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2014 ஏப்ரல் 04 இல் உள்ளவாறு விற்பனை செய்யப்பட்ட 12 வாகனங்களில் 07 வாகனங்களை சட்டரீதியாக கையளிப்பதற்கான விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்பட்டு கையளிப்பாளரின் பிரதி (MTA 6) மோட்டர் போக்குரவத்துத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அந்த வாகனங்கள் 2014 நவம்பர் 13 ஆந் திகதி வரையிலும் புதிய உரித்தாளிக்கு கையளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) விற்பனைக்காக கேள்வி கோரப்பட்டிருந்த வாகனத்திற்கு கூடிய விலை சமர்ப்பித்த கேள்விதாரரினால் 2014 யூலை 09 ஆந் திகதி பணம் செலுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக ஆராய்ந்து பார்க்காது இரண்டாவது கூடிய விலை சமர்ப்பித்த கேள்விதாரரினால் குறிப்பிடப்பட்ட விலையைச் செலுத்தி வாகனத்தைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்ததாக அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் 2014 யூலை 21 ஆந் திகதி அந்த வாகனத்திற்கு பணம் செலுத்தப்பட்டிருந்தது. பின்னர் இரண்டாவது கூடிய விலை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு வழங்கப்பட்ட பணத்தைப் பொறுப்பேற்ற பற்றுச்சீட்டு இரத்துச்செய்யப்பட்டு மீண்டும் பணம் மீளச் செலுத்தப்பட்டிருந்தது.

(vii) வாகனங்களைப் பாவனையிலிருந்து அகற்றும் மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்யும் குழுவினால் பதிவினை இரத்துச் செய்து விற்பனை செய்வதற்காக சிபாரிசு செய்யப்பட்ட 07 வாகனங்கள் தொடர்பில் 2014 நவம்பர் 13 ஆந் திகதி வரையிலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) அதற்கு மேலதிகமாக பாவனைக்கு எடுக்க முடியாது தெபானம நாற்றுமேடையில் தரித்து வைக்கப்பட்டிருந்த 05 வாகனங்கள் 2014 நவம்பர் 13 ஆந் திகதி வரையிலும் தரித்து வைக்கப்பட்டிருந்தது. அந்த வாகனங்கள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ix) மேலும் வாகனங்களை பாவனையிலிருந்து அகற்றும் மற்றும் மதிப்பீடு செய்யும் குழுவின் சிபாரிசிக்காக சமர்ப்பிக்கப்படாதிருந்த 02 வாகனங்கள் தெபானம நாற்றுமேடையில் 2014 நவம்பர் 13 ஆந் திகதி வரையிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(x) வாகனமொன்றைக் கொள்வனவு செய்த நபரினால் 2014 செப்தெம்பர் 25 ஆந் திகதி ரூபா 300,000 செலுத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக அவருக்கு வழங்கப்பட்ட பணம் கையேற்ற பற்றுச்சீட்டில் கையேற்கப்பட்ட பணம் ரூபா 3,000,000 ஆக இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடப்பட்ட பெறுமதி ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருந்தது.

## 4.17 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 85 | 65 | 20 |
| (ii) | மூன்றாம் நிலை | 42 | 11 | 31 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,383 | 1,109 | 274 |
| (iv) | ஆரம்ப நிலை | 1,609 | 1,022 | 587 |
| | மொத்தம் | 3,119 | 2,207 | 912 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 912 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.